DEPOSITION OF WITNESS

(Chapter XXV BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI
ST.C.No. 1187/2022 D.W. 2 திவ்யா க/பெ. திருச்செல்வன்

நாள் 16.06.2026

**புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

கடன் உதவி பெறுவதற்கு ஏஜெண்டு இருக்கிறார்கள் அது புகார்தாரர் என்று யார் மூலமாக தெரிந்து கொண்டேன் என்ற விபரத்தை எனது முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். முதன் முறையாக புகார்தாரரை எந்த தேதியில் சந்தித்தேன் என்றும், எந்த வங்கியில் கடன் பெறுவது, வங்கி கடன் எவ்வளவு, மாததவனை எவ்வளவு மற்ற என்னென்ன ஆவணங்கள் தேவை, ஏஜெண்டு கமிஷன் பேசப்பட்டது குறித்து முதல் விசாரணையில் இல்லை என்றால் சொல்லியுள்ளேன். நான் முதல் விசாரணையில் சொல்லவில்லை வழக்கிற்காக சொன்னதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

17.08.2022 ம் தேதி ஏற்படுத்தப்பட்டதாகவும், நான் அதை போட்டோ எடுத்துக்கொண்டு எனது கணவருக்கு அனுப்பியதாக சொல்லும் ஒப்பந்த பத்திரத்தில் புகார்தாரர் கையொப்பம் இல்லை என்று சொன்னால் சரிதான். 17.08.2022 ம் தேதி வரை நான் எந்த வங்கியில் லோன் எடுக்கபோகிறோம் என்ற விபரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். ரெப்போ வங்கியில் இருந்து எந்த தேதியில் போன் வந்தது, விண்ணப்பம் எப்போது கொடுத்தேன் என்றும், எந்த தேதியில் விண்ணப்பத்தில் கையொப்பம் செய்யப்பட்டது என்றும், ரெப்போ வங்கிற்கு எப்போது முதல் முறையாக சென்றேன் என்றும், எந்த தேதியில் ஆவணம் கொடுத்தேன் என்ற விபரம் எனது முதல் விசாரணையில் இல்லை என்றால் சரிதான்.

எனக்கு லோன் கொடுப்பது சம்பந்தமாக வீட்டிற்கு வந்து என்னை விசாரணை செய்தார்கள் என்றால் போன் மூலம் விசாரணை செய்தார்கள். பின்னர் வீட்டிற்கு வந்தார்கள். எந்த தேதியில் எனது வீட்டிற்கு ரெப்போ வங்கியில் இருந்து வந்தார்கள் என்றால் செப்டம்பர் மாதம் 2022 ம் வருடம் தேதி ஞாபகம் இல்லை. நான் முதன் முதலாக புகார்தாரை சந்தித்த நாளில் இருந்து ரெப்போ வங்கியில் லோன் பெற்ற நாள் வரை புகார்தாரர் ரெப்போ வங்கி முகவர் என்று ஊர்சிதம் செய்யப்படவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் ரெப்போ வங்கி முகவர் என்பதற்கான ஆவணம் தாக்கல்

செய்யப்படவில்லை என்றால் சரிதான். நான் புகார்தாரர் ரெப்போ வங்கியில் கடன் உதவி பெற்று தரும் ஏஜெண்டு என்று நம்பி Gpay மூலம் தொகை செலுத்தியதாக என்னால் சொல்லப்படுவது தொடர்பாகவோ, என்னிடம் கமிஷன் கேட்டு மிரட்டியது தொடர்பாகவோ, கையொப்பம் செய்யப்பட்ட காசோலை ஆவணங்கள் ஆகியவற்றை பெறுவதற்கு காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. மேற்படி ஆவணங்கள் கேட்டு புகார்தாரருக்கு நான் எந்த வழக்கறிஞர் அறிவிப்புமும் கொடுக்கவில்லை என்றால் கொடுக்கவில்லை. காசோலை மற்றும் காசோலையில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். Gpay மூலம் செலுத்தப்பட்ட தொகை இன்ன காரணங்களுக்காக அனுப்பப்பட்டது என்ற விபரம் இல்லை என்றால் சரியல்ல. இருக்கிறது.

நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்தில் EXD2 to EXD5 வரை வழக்கு காசோலை தொடர்பாகவோ, காசோலை தொகை தொடர்பாகவோ எந்த விபரமும் இல்லை என்று சொன்னால் சரிதான். EXD12 ஆவணத்தில் என்னென்ன விபரங்கள் உள்ளது என்று தனியாக தட்டச்சு செய்யப்பட்டு வைக்கப்படவில்லை என்று சொன்னால் ஆமாம். 65(b) சான்றிதழில் எந்த தேதியில் புகைப்படம் எடுக்கப்பட்டது எந்த செயலியில் சேமிக்கப்பட்டது. அது எங்கு print out தனித்தனியாக செய்யப்பட்ட என்றவிபரங்கள் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எல்லாம் குறிப்பிடப்பட்டுள்ளது. 65(b) சான்றிதழில் சொன்ன விபரங்கள் யார் சொன்னது என்றால் நான் சொன்னது தான். நான் என்ன படித்துள்ளேன் என்றால் B.E படித்துள்ளேன்.

நான் தாக்கல் செய்துள்ள EXD11 ஆவணமானது உரிய முறையில் தயார் செய்யாமல் என்னால் உற்பத்தி செய்யப்பட்டு அதற்கு ஏற்றாற்போல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மாற்று முறை ஆவண சட்டத்தின் படி குற்ற பொறுப்பிற்கு நான் உள்ளாகியிருப்பதால் இவ்வழக்கில் இருந்து தண்டனையில் இருந்து தப்பிப்பதற்காக என்னால் உற்பத்தி செய்யப்பட்ட ஆவணத்திற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,

Judicial Magistrate No.I,

Mannargudi